தமிழ்நாடுஉள்ளாட்சிஅமைப்புகள்முறைமன்றநடுவம்
எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை:திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடுஉள்ளாட்சிஅமைப்புகள்முறைமன்றநடுவர்

ஆணை எண்.145/ந/2024

நாள்.25.11.2024

திரு.S.சான்ந்பாஷா,
கள்ளக்குறிச்சி. – முறையீட்டுமனுதாரர்

நகராட்சிஆணையாளர்,
கள்ளக்குறிச்சி நகராட்சி, கள்ளக்குறிச்சி – எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சிமாவட்டம், கள்ளக்குறிச்சி, எம்.ஜி.ஆர்.நகர், 8–வது குறுக்குத்தெரு, கதவு எண்.131 D 27 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. s.சான்ந்பாஷா என்பவரின் 06.11.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2023 அன்று பெறப்பட்டு, 145/ந/2024 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டுமனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சிமாவட்டம், கள்ளக்குறிச்சி, எம்.ஜி.ஆர்.நகர், 8–வது குறுக்குத்தெரு, கதவு எண்.131 D 27 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. s.சான்ந்பாஷா என்பவர் தனது 06.11.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

நான் குடியிருக்கும் வ.உ.சி. நகர், எம்.ஜி.ஆர் நகர் மோரை ரோட்டில் அமைந்துள்ள வ.உ.சி. நகரில் இருந்து கா.மாமனந்தல் செல்லும் பகுதியில் தார்சாலை முழுவதுமாக பணிகள் நிதிபற்றாக்குறை காரணமாக 24 அடி அமைக்காமல் அரைகுறையாக போடப்பட்டுள்ளது. அதை நகராட்சி ஆணையர் அவர்கள் கள ஆய்வு செய்து மீதி உள்ளதை நடவடிக்கை மேற்கொண்டு அமைத்துதர கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே வார்டு–11க்கு சம்மந்தப்பட்ட பொட்டாட்ங்காடு பகுதி ஆகும். தற்போது பணிநிறைவடைந்த நிலையில் வட்டாட்சியர் திரு.ராமசாமி என்பவர் வசித்து வரும் பாப்பி இல்லம் சம்மந்தப்பட்ட பகுதி ஆகும். அந்த பாதையில் நகராட்சியால் போடப்பட்ட தார்சாலை மற்றும் வாய்க்கால் முழுவதுமாக போட்டுத்தர முறையான ஆவணங்கள் நிலம் சம்மந்தப்பட்ட வீட்டு மனை லேஅவுட் பெற்றுக்கொண்டு அரைகுறையாக போடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து, மீதி உள்ளதை இனி அமைத்துதர கேட்டுக்கொள்கிறேன். மேற்படி பகுதி கள்ளக்குறிச்சி சர்வே எண்.84 உட்பிரிவு 5–ல் சம்மந்தப்பட்ட அரசு புறம்போக்கு நிலம் அதை தொடர்ந்து புல எண். 85–ன் சில உட்பிரிவு அமைந்துள்ளன. இந்தப்பாதை கடந்த 40 ஆண்டுகளாக மண்ரோடு அமைந்துள்ள காலத்தில் இருந்தே மோரை ரோட்டில் இருந்து

கா.மாமனந்தல் செல்லும் அந்த வழியாகத்தான் பொதுமக்கள் பலர் AKT கிணற்றில் பம்புசெட் ஊற்று தண்ணீர் கொண்டுவர மற்றும் மாட்டுவண்டி இருசக்கர வாகனம் சென்றுவர பயன்படுத்தி வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடதக்கது. அதை தொடர்ந்து பயன்படுத்திட குடிமக்களுக்கு அமைத்து தர வேண்டிய வசதிகள்அமைத்துத் தரவேண்டியுள்ளார்

2. மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவத்தின் 19.01.2024 நாளிட்டகடிதம் மூலம் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் தனது 21.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் சிறப்புசாலைகள் திட்டம் 2015–2016–ன் கிழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் (6) ஆறு இடங்களில் தார் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் வார்டு எண்.04–ல் கா.மாமனந்தல் சாலை பகுதியில் 200 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள்அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி, சாலை பகுதி அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள சாலையாகும். அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காததால் 195 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள்அமைக்கப்பட்டது. அவற்றில் திரு.நாராயணன், த/பெ. முத்தாப்பிள்ளை, கள்ளக்குறிச்சி என்பவர் அச்சாலையின் முடிவு பகுதியில் உள்ள 5 மீட்டர் நீளத்திற்கு உள்ளபாதை இடம் அவருக்கு சொந்தமாக பட்டா பெற்றுள்ளதாகவும், அவ்விடத்தில் தார்சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவித்து பணியினை நிறுத்தினார். இதன் காரணமாக 200 மீட்டர் அச்சாலையில் 195 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி அமைக்கப்பட்டு மீதமுள்ள 5 கடைசிமீட்டர் நீளத்திற்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டது.

மேற்படி சிறப்பு சாலைகள் திட்டம் 2015–2016ன் கீழ் அமைக்கப்பட்டதில் விடுபட்ட 5 மீட்டர் இடம் தனிநபருக்கு சொந்தமானதாக உள்ளதால் நகராட்சியால் அவ்விடத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் அமைத்து தர இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி தனிநபர் பட்டா பெற்றுள்ளதை நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்து ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவ்விடத்தில் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு.S.சான்ந்பாஷாஅவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 22.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 19.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.சான்ந்பாஷா22.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

எனது வீட்டருகில் போடப்படாமல் விடுபட்டுள்ள தார்சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் அமைத்து தரும்படி கோருகிறேன். சாலை போடப்பட வேண்டிய இடம் பொதுப்பாதையாக இருந்து வந்து சமீபத்தில் பட்டா நிலமாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளேன். நான் சமர்ப்பித்த ஆவணங்களை ஆய்வு செய்து ஆணையருக்கு அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளஆணையிடுமாறு கோருகிறேன். ஆணையர் அவர்களும் மேற்படி நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். எனக்கு சம்மந்தப்பட்ட மனை எண்.21 பொதுப்பாதையில் விடப்பட்ட 5 மீட்டர் சாலை அமைத்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

6) கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் 22.10.2024 அன்று நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் திரு.S.சான்ந்பாஷா தெரிவித்துள்ள மனு குறித்து நான் எனது துறை அலுவலர்களுடன் 21.10.2024 அன்று நேரில் ஆய்வு செய்தேன். நான் கள்ளக்குறிச்சி நகராட்சியில் பணியில் சேர்ந்து ஒரு வாரம் ஆகிறது. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் பாதியில் நிறுத்தியுள்ள இடமானது சுமார் 200 மீட்டர் நீளமுள்ள சாலையாகும். இது மனை அனுமதி பெறாமல் 19 நபர்கள் சேர்ந்து ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி அதில் மனைகளாக பிரித்துக் கொண்டு தங்களுக்குள்ளாக ஒரு பொதுப்பாதை அமைத்து பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. அப்போது special road programme (SRP – 2015-16) என்ற திட்டத்தின் கீழ் அங்கு வசித்து வந்த மனைதாரர்களின் ஒப்புதலுடன் அப்பாதையில் (BT Road) அமைத்து தரும் போது மனுதாரரின் இடத்திற்கு முன்புறம் உள்ள சாலைக்கு இருபுறமும் உள்ள இரண்டு மனைதாரர்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் சுமார் 5 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்படவில்லை. மனுதாரரின் புகார் அடிப்படையில் வருவாய்துறை ஆவணங்களை ஆய்வு செய்ததில், அந்த 200 மீட்டர் பாதையும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்பது தெரிய வருகிறது.

மேற்கண்ட சூழலில் நடைமுறையில் உள்ள சட்ட விதிகளுக்கு உட்பட்டு, unapproved ஆக உள்ள மனைகளை regularize செய்வதற்கும், மனுதாரர் கூறியுள்ளபடி, மீதமுள்ள சாலை அமையவுள்ள இடம் பொதுப்பாதையா என்பது வருவாய்துறை மூலம் உறுதி செய்யப்படும் என்றும், பொதுப்பாதை என்று உறுதி செய்யும் பட்சத்தில் சாலை அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அவ்வாறு அவ்விடம் பொதுப்பாதையாக இல்லாமல் பட்டா நிலமாக இருக்கும் பட்சத்தில், வகைபாடு மாற்றம் செய்வதற்கான சாத்தியக்கூறு குறித்து வருவாய்துறை மூலம் உறுதி செய்யப்படும் என்றும் இந்நடவடிக்கைகள் மூன்று மாதகால அவகாசத்திற்குள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார். மேலும் தனது 21.10.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விபரங்களை தனது மேல்வாக்கு மூலமாக எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனுமற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது வீட்டருகில் போடப்படாமல் விடுபட்டுள்ள தார்சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் அமைத்து தரும்படியும், சாலை போடப்பட வேண்டிய இடம் பொதுப்பாதையாக இருந்து வந்து சமீபத்தில் பட்டா நிலமாக மாற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து தான் சமர்ப்பித்த ஆவணங்களை ஆய்வு செய்து ஆணையாளருக்கு அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிடுமாறும் தனக்கு சம்மந்தப்பட்ட மனை எண்.21 பொதுப்பாதையில் விடப்பட்ட 5 மீட்டர் சாலை அமைத்து தரும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில், மனுதாரர் தெரிவித்துள்ள சாலை மற்றும் வடிகால் பணி நிறுத்தியுள்ள இடமானது சுமார் 200 மீட்டர் நீளமுள்ள சாலை என்றும், இது மனை அனுமதி பெறாமல் 19 நபர்கள் சேர்ந்து ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி அதில் மனைகளாக பிரித்துக் கொண்டு தங்களுக்குள்ளாக ஒரு பொதுப்பாதை அமைத்து பயன்பாட்டில் இருந்து வந்ததாகவும், special road programme (SRP -2015-16) என்ற திடடத்தின் கீழ் அங்கு வசித்து வந்த மனைதாரர்களின் ஒப்புதலுடன் அப்பாதையில் (BT road) அமைத்து தரும் போது மனுதாரரின் இடத்திற்கு இருபுறமும் உள்ள சாலைக்கு இருபுறமும் உள்ள இரண்டு மனைதாரர்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் சுமார் 5 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்படவில்லை

என்றும், மனுதாரரின் புகார் அடிப்படையில் வருவாய்துறை ஆவணங்களை ஆய்வு செய்ததில், அந்த 200 மீட்டர் பாதையும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், நகராட்சிஆணையர், தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மனுதாரரின் புகார் குறித்து, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள், மாண்பமை உயர்நீதிமன்றங்களின் அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்களின்படி மூன்று மாத காலத்திற்குள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள்25–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாளை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடுஉள்ளாட்சிஅமைப்புகள்முறைமன்றநடுவர்

பெறுநர்

1) திரு.S.சான்ந்பாஷா,
131–D–27, 8–வது குறுக்குத்தெரு,
எம்.ஜி.ஆர்.நகர்,
கள்ளக்குறிச்சி – 606 202.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) நகராட்சிஆணையர்,
கள்ளக்குறிச்சி நகராட்சி,
கள்ளக்குறிச்சி – 606 202.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) நாட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை– 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை– 600 028.

நகல்: மாண்புமிகுமுறைமன்றநடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

5/12/24

சட்டஆலோசகர்/செயலாளர்(முகூபொ)